# பரிசுத்த வேதாகமம்
# ஓர் அறிமுகம்

(Introducing the Bible)



*ஒரு கிறிஸ்டடெல்ஃபிய பிரசுரம்*

# பரிசுத்த வேதாகமம்-ஓர் சுருக்கமான அறிமுகம்

# The Bible - A short introduction

வேதாகமம் ஓர் அதிசயிக்கத்தக்க புஸ்தகமாகும். அது வளமிகுந்த ஓர் வரலாறு, வசீகரிக்கும் கவிதை, உன்னத ஞானம் மற்றும், எதிர்கால முன்னறிவிப்புகளின் எழுத்துக்கள் நிறைந்தது. அது யூதர் மற்றும் கிறிஸ்தவர்களின் அடிப்படை நம்பிக்கைகளின் அஸ்திபாரமாக உள்ளது. அது உலக நாகரீகம் மற்றும் சமூக பண்பாடுகளின் மேம்பாட்டுக்கு மாபெரும் ஆதாரமாக அமைந்துள்ளது. இப்பிரசுரம், எக்காலத்திலும் நன்கு விற்பனையாகும் நூலாகிய வேத புஸ்தகத்தில் அடங்கியுள்ள வியப்புக்குரிய எழுத்துக்களைப் பற்றி சுருக்கமாக அறிமுகஞ் செய்யும்படி உங்களிடம் அளிக்கப்படுகிறது.



***by Linus and Susan Daniel***

# பொருளடக்கம்


வேதாகமத்தின் புத்தகங்கள் .................................. 3

வேதாகமத்தின் அடிப்படைச் செய்தி .................. 5

வேதாகமத்தின் முக்கிய தலைப்புகள் மற்றும் வேதப்பகுதிகளின் மாதிரி விளக்கம் ................... 6

ஆரம்பம் .......................................................... 6

தேவனின் குணாதிசயம் .................................. 6

சமாதானம் மற்றும் நியாயத்தை மேம்படுத்தும் நியாயப்பிரமாணம் ......................................... 7

வேதாகமத்தின் ஞானம் மற்றும் தத்துவம்........ 8

தேவன் ஏற்படுத்திய வாக்குத்தத்தங்கள் .......... 9

வேதாகமமும் இஸ்ரவேல் தேசத்தாரும் ........ 10

வேதாகமம் உலகத்தின் எதிர்காலத்தை அறிவித்தல்.................................................... 12

ஜீவனும் மரணமும்........................................ 15

வேதாகமமும் தொல்பொருள் ஆய்வும் ............ 16

முடிவுரையின் குறிப்புகள் .................................. 17

## ‘வேதாகமம்’ என்னும் வார்த்தையின் அர்த்தம் என்ன?

உலகில் அதிகம் விற்பனையாகும் புத்தகம் வேதாகமம் என அறிகின்றோம், ஆனால் வேதாகமம் பலப் புத்தகங்களின் ஒரு தொகுப்பு என்பது உங்களுக்குத் தெரியுமா? உண்மையில் ‘வேதாகமம்’ (பைபில்) என்ற வார்த்தை ‘பிப்லியா’ என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து உண்டானது அதன் அர்த்தம் “புத்தகங்கள்” என்பதாகும்.



வேதாகமம் பல தொகுதிகளின் ஒரு புத்தகமாக இருப்பினும் அதில் அறுபத்தாறு (66) தனித்தனி புத்தகங்கள் அடங்கியுள்ளன. இப்புத்தகங்கள் பல் வேறுபட்ட பின்னணியிலிருந்து வந்த வெவ்வேறு ஆசிரியர்களால் எழுதப் பட்டிருக்கிறது. அதில் அரசர், இடையர், தீர்க்கதரிசிகள், ஆசான்கள், நியாயவாதிகள் மற்றும் மருத்துவர்களும் உள் ளடங்குவர். அந்த ஆசிரியர்கள் பத்து வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்தவர்கள். இவர்கள் 1,600 வருடங்களின் கால இடைவேளியில், ஒன்றுக்கொன்று தொடர்புடைய இப்புத்தகங்களை மூன்று (எபிரெயு, கிரேக்கு மற்றும் அராமிக்) மொழிகளில் எழுதினர். இருப்பினும் அவர்களால் விடுக்கப்பட்ட செய்தி ஒன்றி இருப்பது வியப்புக்குரியது. இதன் எழுத்தாளர்கள் அனைவரும் தேவன் அருளிய வார்த்தைகளை எழுதி அவருடைய செய்தியை உலகிற்கு அறிவித்தனர் என்று வேதாகமம் பகீரங்கப்படுத்துகிறது.

## வேதாகமத்தின் புத்தகங்கள்

‘பைபில்’ என்னும் கிறிஸ்தவ வேதாகமத்தின் இரு பெரும் பகுதிகளில்: ஒன்று **பழைய ஏற்பாடு,** இதில் முப்பத்தொன்பது புத்தகங்களும், மற்றும் **புதிய ஏற்பாடு,** இதில் இருபத்தேழு புத்தகங்களும் அடங்கியது. ஏற்பாடு என்பது இருதரப்பினருக்கு இடையில் இடம்பெறும் ஒப்பந்தமாகும்... இவ் விஷயத்தில் தேவனுக்கும் மக்களுக்கும் இடையிலான உடன்படிக்கையாகிறது.

பழைய ஏற்பாடு மனுக்குல சிருஷ்டிப்பிலிருந்து இயேசுகிறிஸ்து பிறப்பதற்கு முன்பு 400 வருடங்கள் வரை நிகழ்வைப்பற்றி கூறுகின்றன. பெரும்பான்மையான எழுத்துக்களைப் பொதுவான இரண்டு பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம்.

***நியாயப்பிரமாணம்:*** முதல் ஐந்து புத்தகங்களில் பண்டைய உலக வரலாற்றின் ஆரம்ப நிகழ் வுகளும், தேவன் மோசேயின் மூலம் இஸ்ரவேல் மக்களுக்கு அளித்த நியாயப் பிரமாணங்களும் அடங்கி இருக்கின்றன. இப்புத்தகங்கள் பிற் காலப் புத்தகங்கள் அனைத்திற்கும் அடிப் படையை வகுக்கின்றன.

***தீர்க்கதரிசனம்:*** வேதாகமத்தில் நிறைந்துள்ள வியக்கத்தக்கத் தீர்க்கதரிசனங்களில் இஸ்ரவேல் மற்றும் அதனருகிலுள்ள தேசங்களின் வரலாறு மிகத் தெளிவாக முன் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இத் தீர்க்கதரிசனங்கள் மூலம் இஸ்ரவேலர்கள் தங்கள் துன்மார்க்கத்தைக் கைவிட்டு, தேவனிடத்தில் உண்மை யாக நடந்து, தங்கள் அயலாரிடம் அன்புடன் நடக்கும்படி அடிக்கடி தலையிட்டு எச்சரிக்கின்றன. குறிப்பாக இப்புத்தகங்கள் முழு உலகத்திற்கும் சமாதானத்தையும் நீதியின் செழுமையையும் கொண்டு வரும் ஒரு எதிர்காலத் தலைவரின் வருகையை முன்னறிவித்தன.

பழைய ஏற்பாட்டின் அடிப்படையில் **புதிய ஏற்பாட்டின்** எழுத்துக்கள் வாக்குத்தத்தத்தின் தலைவர்- இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவன் மக்களைச் சந்திப்பதை விஸ்தரிக்கின்றது. புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள் பொதுவான இரண்டு பாகங்களாகப் பிரிக்கின்றன:

**சுவிசேஷங்கள் அல்லது “நற்செய்தி” புத்தகங்கள்:** முதல் நான்கு புத்தகங்கள் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் போதனைகளை நான்கு வெவ்வேறு ஆசிரியர்களின் குறிப்புகளின் மூலம் அறிமுகப் படுத்துகின்றன.

**கிறிஸ்து சென்றபின் ஆரம்ப திருச்சபைப் பதிவுகள்**: ‘அப்போஸ்தலருடைய நடபடிகள்’ யூத மற்றும் ரோமத் தலைவர்களின் கொடுமையான துன்புறுத்தல், எதிர்ப்பு களுக்கு மத்தியில் இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசம் ரோமராஜ்யத்தில் பரவியதைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. புதிய ஏற்பாட்டின் அநேக ‘புத்தகங்கள்’ கிறிஸ்துவின் சிறப்பான சாட்சிகள் மூலம் ரோமப் பேரரசின் வெவ்வேறு பகுதிகளிலிருந்த கிறுஸ்தவர்களை ஊக்குவித்துப் போதிக்கும்படி நிரு பங்களாக எழுதப்பட்டது. (உ-ம்: கொரிந்தியருக்குப் பவுல் எழுதின நிருபங்கள்).

## வேதாகமத்தின் அடிப்படைச் செய்தி

வேதாகமம் தேவனின் மக்களிடையே காட்டின செய்கையின் மூலம் அவரின் தன்மை மற்றும் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. வேதாகமம் நமக்கு அன்பு, நீதி சமாதானத்தின் வழியைப் போதிக்கிறது.

வேதாகமத்தின் செய்தியை இவ்விரண்டு வாக்கியங்கள் சுருக்கமாக விளக்குகின்றன:

1. நமக்கு ஜீவனையும் நம்மைச்சுற்றி அற்புதமான சிருஷ்டிப்பையும் அளித்த தேவனிடத்தில் அன்புகூறுங்கள்.[1]

2. தேவன் நம்மைப்போன்றே பிறரையும் படைத்திருப்பதால் நம்மைச் சுற்றியுள்ள மக்களிடம் சகோதர - சகோதரிகளைப்போன்று அன்பு செலுத்தவேண்டும். அதாவது, 'மனுஷர்' நமக்கு என்னசெய்யவேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ, அதையே நாம் அவர்களுக்கும் செய்யவேண்டும். [2]

'அன்புகூறு' என்பதன் அர்த்தம், நம்மைச் சூழ்ந்தவர்களிடம் நாம் காட்டுகின்ற நீடிய சாந்தம், தயவு, உண்மை, பணிவு மற்றும் மன்னிக்கும் மனப் பான்மை என்பவைகளாகும். [3]



---

[1] மத்தேயு 22:37 (அதாவது மத்தேயு 22ம் அதிகாரம் 37ம் வசனம்)
[2] மத்தேயு 22:39; 7:12
[3] 1.கொரிந்தியர் 13:4-8

# வேதாகமத்தின் முக்கிய தலைப்புகள் மற்றும் வேதப்பகுதிகளின் மாதிரி விளக்கம்

## ஆரம்பம்

வேதாகமத்தின் ஆரம்பமாக ஆதியாகமம் புத்தகத்தில், *"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமையையும் சிருஷ்டித்தார்"* என்ற வார்த்தைகளுடன் தொடங்குகிறது. இருப்பினும் பரிணாமக் கொள்கை பரவலாக 'உண்மை' என்று போதிக்கப்பட்டு வந்தாலும், அது ஒரு நிரூபிக்கப்படாத **கோட்பாடாக** உள் ளது. வாஸ்தவமாக பற்பல விஞ்ஞான ரீதி யான கண்டுபிடிப்புகளில் உலகம் ஒரு நிபுணரான வல்லுநரால் திட்டமிட்டு சிருஷ்டிக்கபட்டிருக்கிறது என்று வேதாகமத்தின் உண்மையான ஆதாரங்களைக் கொண்டு பகிரங்கப் படுத்துகிறது. உதாரணமாக, 'genome' உயிரணு மற்றும் DNAக்களைக் குறித்த சமீப விஞ்ஞான கண்டுபிடிப்புகளில் நமது சிக்கலான மனித சரீரங்கள் தற்செயலாக உருவாவது முடியாத காரியமென பரிசோதனைகளின் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளனர். மனிதசரீரத்தில் உள்ள 1000000x3 லட்சம் கொண்ட ஒவ்வொரு உயிரணுவிலும் 3.1கோடி DNA அணுக்களின் தொகுப்புகள் இருகின்றன. மனித சரீரத்திலுள்ள DNAக்களை முடிவுக்குக் கொண்டு வந்தால் அது திரும்பவும் சூரியனை நோக்கி மேலெழும்பி, 600 மடங்காகத் திரும்ப வரும். அந்த அதிசய அமைப்பின் **வடிவமான** நம்முடைய சொந்த சரீரங்களாக உலகமுழுவதிலும் வாழ்ந்திருக்கும் நம்மைச் சர்வவல்ல தேவன் சிருஷ்டித்தார் என்று வேதாகமம் பறைசாற்றுகின்றது.



## தேவனின் குணாதிசயம்

வேதாகமத்தின் இரண்டாவது புத்தகத்தில் (யாத்திராகமம்), தேவன் தம்முடைய குணாதிசயத்தை வெளிப்படுத்துகிறார்: *"யாஹ்வே கர்த்தர் இரக்கமும், கிருபையும், நீடியசாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்... அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்..."*[4]

---

[4] யாத்திராகமம் 34:6,7



தேவன் மக்களுக்கிடையில் நிலவும் வர்ணம், இனம், ஆண் பெண் பாகுபாடு மற்றும் சமூக அந்தஸ்து போன்ற அடிப்படை வேறுபாடுகளைக் கொண்டு அவர்களை வித்தியாசம் காண்ப தில்லை என வேதாகமம் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றது. உதாரணமாக, அப்போஸ்தலரின் புத்தகத்தில், *“தேவன் பட்சபாத முள்ளவரல்ல”* என்று நமக்குச் சொல்லப்படுகின்றது: *“எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன்...”* [5] மேலும் மனித இருதயங்களில் அவரை வழிபட விரும்புகிறாரே அன்றி அழகான கட்டிடங்க ளிலல்ல வென்று அப்போஸ்தலரின் புத்தகம் நமக்குக் கூறுகிறது: *“உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப் பட்ட கோவில்களில் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் தமக்கு யாதொன்று தேவை யானதுபோல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை.”*[6]

## சமாதானம் மற்றும் நியாயத்தை மேம்படுத்தும் நியாயப்பிரமாணம்

யாத்திராகமம் புத்தகத்தின் நியாயப்பிரமாணங்களில் ஒன்று, ஒரு எதிரிக்கும் கூட அருள் செய்யும் பண்புடையவர்களாயிருக்கும்படி மக்களுக்கு உப தேசிக்கின்றது: *“உன் சத்துருவின் மாடாவது அவனுடைய கழுதையாவது தப்பிப்போகக் கண்டால், அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டுப் போய் விடுவாயாக.”*[7] இப்படிப்பட்ட விதியின் கொள்கையை மக்கள் சிறிதளவு பின்பற்றுவார்களே யானால் நாம் உலகில் காணும் பகைமை போராட்டம் போன்றவற்றை எவ்வளவு சுலபமாக தீர்க்க முடியும் என்பதை கற்பனைசெய்து பாருங்கள்!

மேலும். தேவனுடைய நியாயப் பிரமாணம் நீதியை உயர்த்தி நேர்மை யற்ற தன்மையை பகீரங்கமாகக் கண்டிக்கின்றது. எடுத்துக்காட்டாக உபாகமம்

---

5 அப்போஸ்தலருடைய நடபடிகள் 10:34,35

6 அப்போஸ்தலருடைய நடபடிகள் 17:24-26

7 யாத்திராகமம் 23:4

புத்தகம் மக்களுக்கு இவ்வாறு அறிவுறுத்துகின்றது: *"நியாயத்தைப் புரட்டாதிருப்பாயாக: முகதாட்சணியம் பண்ணாமலும், பரிதானம் வாங்காமலும் இருப்பாயாக: ஏனெனில் பரிதானம் ஞானிகளின் கண்களைக் குரு டாக்கி, நீதிமான்களின் நியாயங்களைத் தாறு மாறாக்கும்."*[8]



## வேதாகமத்தின் ஞானம் மற்றும் தத்துவம்

வேதாகமத்தில் அன்றாட வாழ்க்கைக்கான அற்புத மான ஞானவார்த்தைகள், அறிவின் தத்துவங்கள் மற்றும் சத்தியம் போன்ற விஷயங்கள் அடங்கி யுள்ளன. உதாரணத்திற்கு நீதிமொழிகள், பிரசங்கி ஆகிய புத்தகங்களில் சாலொமோன் ராஜா எழுதுகிறார்:

*" மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்; முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்."*[9]

*"நான் திரும்பிக்கொண்டு சூரியனுக்குக் கீழே கண்ட தாவது: ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகமும், யுத்தத்துக்குச் சவுரியவாகளின் சவுரியமும் போதாது; பிழைப்புக்கு ஞானமுள்ளவர்களின் ஞானம் போதாது; ஐசுவரியம் அடைகிறதற்குப் புத்திமான்களின் புத்தியும் போதாது; தயவு அடைகிறதற்கு வித்துவான்களின் அறிவும் போதாது; அவர்களெல்லாருக்கும் சமயமும் தேவச்செயலும் நேரிடவேண்டும்."*[10]

*"சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள். அதற்குப் பிரபுவும், தலைவ னும் அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடைக் காலத்தில் தனக்கு ஆகாரத்தை சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்து வைக்கும். சோம்பேறியே, நீ எவ்வளவு நேரம் படுத்தி ருப்பாய்? எப்பொழுது உன் தூக்கத்தை விட்டு எழுந்திருப்பாய்? இன்னுங்கொஞ்சம் தூங்கட்டும், இன்னுங் கொஞ்சம் உறங்கட்டும், இன்னுங் கொஞ்சம் கைமுடக்கிக்கொண்டு*



[8] உபாகமம் 16:19

[9] நீதிமொழிகள் 17:22

[10] பிரசங்கி 9:11

*நித்திரை செய்யட்டும் என்பாயோ? உன் தரித்திரம் வழிப்போக்கனைப் போலவும் உன் வறுமை ஆயுதமணிந்தவனைப் போலவும் வரும்."*[11]

## தேவன் ஏற்படுத்திய வாக்குத்தத்தங்கள்

தேவன் மனிதவர்க்கத்தினருக்கு ஏற்படுத்திய ஆச்சரிய மான பல வாக்குத்தத்தங்களை வேதாகமம் குறிப்பிடு கின்றது. தேவன் ஒரு ஆச்சரியகரமான எதிர் காலத்தை உலகத்திற்காக திட்டமிட்டிருக்கிறார் என்பதை இந்த வாக்குத்தத்தங்கள் நமக்குக் காட்டுகின்றன.




தேவன் தமது சொந்த ராஜ்யத்தை பூமிமுழுவதும் ஸ்தாபிப்பதாக வாக்குறுதி யளித்திருக்கின்றார் - 'பரலோக' ராஜ்யத்தில் ஒரு மாபெரும் அரசராக - இயேசுவின் ஆளுகையின் கீழ் அனைத்து ஜனங்களும் சமா தானத்தையும் நன்மையையும் அனுப விப்பர். ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் எழுதிய படி இந்த அரசர் நடைமுறை உலகத் தலைவர்களிலிருந்து முற்றிலும் வேறுப்பட்டிருப்பார்: *"அவர் (இயேசு) தமது கண் கண்டபடி நியாயந் தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும், நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமை யானவர்களுக்குத் தீர்ப்புச் செய்து, பூமியைத் தமது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவா சத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார். நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சை யுமாயிருக்கும்."*[12] அந்நாட்களில் மக்களுக்கு அதிசய மான காலங்களிருக்கும் என்று ஏசாயா தீர்க்கதரிசி மேலும் விவரிக்கையில், *"அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள்; நூறு வயது சென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப் படுவான், நூறு வயதுள்ளவனாகிய பாவியோ சபிக்கப் படுவான்."*[13]

---

[11] நீதிமொழிகள் 6:6-11

[12] ஏசாயா 11:3-5

[13] ஏசாயா 65:20

தேவன் நீண்ட காலத்திற்கு முன்பு இந்த வாக்குறுதிகளை ஏற்படுத்தி யிருந்தாலும், உலகம் நேர்மையற்ற மாறுபட்ட நிலைகளில் தொடர்கிறது, அதே சமயம் தேவன் பல தலைமுறைகளாக அவருடைய வாக்குறுதிகளை உறுதிப்படுத்தி வந்திருக்கின்றார். இந்த வாக்குறுதிகள் ஏன் இன்னும் நிறைவேறவில்லை? யென நாம் கேட்கலாம். கர்த்தராகிய இயேசுவின் சீஷர்களில் ஒருவனாகிய பேதுரு எழுதிய நிருபங்கள் ஒன்றில், இக்கேள்விக்கு இவ்வாறு பதிலளிக்கின்றான்: *"கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம்போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிற தென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணு கிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்பாகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமை யுள்ளவரா யிருக்கிறார்."*[14]



## வேதாகமமும் இஸ்ரவேல் தேசத்தாரும்

இஸ்ரவேல் தேசத்தில் இன்று ஏன் மிகுந்த தாக்குதல்கள் இடம்பெறு கின்றன வென்று நீங்கள் எப் போதாவது வியந்ததுண்டா? பண் டைய இஸ்ரவேலரின் வரலாற்றில் யூதர்கள் மற்றும் அரேபியர் களுக்கிடையிலான போராட்டங் களின் மூலகாரணத்தை வேதாக மத்தில் காணலாம். அதன் வர லாற்றின் விவரத்தை இச்சிறிய பகுதியில் விவரிக்க இயலாது. எனினும் இத்தருணத் தில் குறிப்பாக:




நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பு, தேவன் ஒரு தனிப்பட்ட மனிதனாகிய ஆபிரகாமுக்கு வாக்களித்தது என்னவென்றால் *"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து..."*[15] இஸ்ரவேலரின் தேசத்தைக் குறித்து: *"நீ பரதேசியாய்த்*

[14] 2 பேதுரு 3:8-9
[15] ஆதியாகமம் 12:2

*தங்கிவருகிற கானான்* (பின்பு இஸ்ரவேல் என்னப்பட்ட) *தேசம் முழுவதையும் உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுப்பேன்,"*[16] என்று தேவன் வாக்களித்தார். ஆயினும் அவனும் அவனுடைய சந்ததியும் அதைச் சுதந்தரித்து மகிழ்வதற்கு முன்பு மிகவும் கஷ்டமான நிகழ்ச்சிகள் நடைபெறுமென்று அவனிடம் வெளிப்படுத்தினார்.




ஆபிரகாமின் வாழ்நாட்களில் அவனுக்கு வாக்கு அளிக்கப்பட்ட தேசத்தை அவன் அடையவில்லையென வேதாகமம் கூறுகிறது. இருப்பினும் தன்னுடைய சந்ததியினர் ஒரு நாள் இத்ததேசத்தைச் சுதந்தரித்து என்றென்றும் வாழ்வார்கள் என்ற விசுவாசத்தோடு அவன் மரித்தான். ஆயினும் தேவன் ஆபிரகாமின் மரணத்தைத் தொடர்ந்து கணிசமான ஆண்டுகளுக்குப் பின்பு அவ்வாக்குத்தத்தங்களைத் தொடர்ந்து பின் வரும் வழிகளில் நிறைவேற்றினார். ஆபிரகாமின் சந்ததியினர் தங்கள் தேசத்தில் கோரமான வறட்சியினால் எகிப்துக்கு இடம் பெயர்ந்தனர். அங்கு அவர்கள் பலுகிப் பெறுகியதைத் தங்களுக்கு ஆபத்தாக எகிப்தியர்கள் கண்டனர். பார்வோன் அரசன் அவர்களை 400 வருடங்கள் கொடூரமாக அடிமைத்தனத்திற்குட்படுத்தி, புதிதாய்ப் பிறக்கும் யூத குழந்தைகளைக் கொல்லும்படியான சட்டத்தைப் பிறப்பித்தான். இருப்பினும் தேவனுடைய வாக்குத் தத்தங்களின் பிரகாரம், அவர் மோசே என்றொரு இரட்சகனைக் கொண்டு (ஆபிரகாமின் சந்ததி யாராகிய) யூதர்களைப் பலத்த அற்புதங்களின் மூலம் எகிப்திய தலைவர்களின் கொடுமைகளிலிருந்து விடுவித்தார். அவன் அவர்களை வனாந்தர மார்க்கமாக வாக்குத்தத்தத்தின் (இஸ்ரவேல்) தேசத்திற்கு நடத்தி கொண்டுவந்தான். இந்நிகழ்ச்சி தேவனின் வாக்குத்தத் தத்தின் ஆரம்ப நிறைவேறுதலாகும். அதன் நீண்ட கால வாக்குத்தத்தமாகிய "நித்திய சுதந்திரம்" ஆபிரகாமின் மாபெரும் சந்ததியில் உதித்த இயேசு கிறிஸ்துவின் மூலம் இன்னும் நிறைவேறாத இவ்வாக்குறுதி இனி நிறைவேறும்.

---

[16] ஆதியாகமம் 17:8

தேவன் அவருடைய ‘விசேஷித்த’ ஜனங்களாக இஸ்ரவேலரை ஏற்படுத்தினார். ஏனெனில் அவர்களில் விசுவாசமுள்ள முன்னோரான ஆபிரகாமுக்கு அவர் வாக்களித்திருந்தார். அக்காலத்தில் அத்தேசத்தில் வாழ்ந்த துன்மார்க்கரை அழித்து, இஸ்ரவேல் மக்கள் ஒரு தேசத்தாராவதற்குத் தேவன் அவர்களுக்கு உதவினார். எனினும் உபாகமம் புத்தகத்தில் இஸ்ரவேலரிடம் கூறினார்: *“உன் நீதியினிமித்தமும் உன் இருதயத்தினுடைய உத்தமத்தினிமித்தமும் நீ அவர்கள் தேசத்தைச் சுதந்தரிக்கும்படி பிரவேசிப்பதில்லை; அந்த ஜாதிகளுடைய ஆகாமி யத்தினிமித்தமாகவும் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்னும் உன் பிதாக்களுக்குக் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்ன வார்த்தையை நிறைவேற்றும் படியாகவும், உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாகத் துரத்திவிடுகிறார்.”*[17]

தேவன் விசேஷித்த ஆசீர்வாதங்களை அளித் திருந்தும் அவனுடைய சந்ததியில் அநேகர் மிகவும் அவிசுவாசிகளாயிருந்து முரட்டாட்டமுள்ளவர்கள் ஆனார்கள். இரட்சிப்பு பிறப்பினாலே அன்றி விசுவாசத்தின் நற்கிரியைகளினால் வருகின்றது என்று தேவன் தெளிவாக்குகின்றார். (குறிப்பு: இஸ்ரவேல் என்ற வார்த்தை ஆபிரகாமின் பேரனான யாக்கோபின் மற்றொறு பெயராகும்).

## வேதாகமம் உலகத்தின் எதிர்காலத்தை அறிவித்தல்

தேவன் எதிர்கால அறிவை அறியும் வல்லமை யுடையவர். அந்த வல்லமையால் எதிர்காலத்தில் நடக்கப் போவதைச் சரியாக அறிகின்றார். காலா காலங்களாக, தேவன் தொடர்ச்சியாக எல்லாவிதமான அழிவுகள் மற்றும் அதிசயமான உலக நிகழ்வு களையும் மிகத் தெளிவாக முன்னறிவித்திருக்கிறார். தேவன் இந்த எதிர்கால நிகழ்ச்சிகளைத் தாம் தெரிந்து கொண்ட தீர்க்கதரிசிகளினூடாக மனித வர்க்கத் தினருக்கு வெளிப்படுத்தினார். அக்காலத்தின் மக்க ளுக்குச் சொல்லிய யாவும் எதிர்கால சந்ததியின ருக்காக வேதாகமத்தில் தீர்க்கதரிசன வார்த்தைகளாக எழுதப்பட்டிருக்கின்றன.

[17] உபாகமம் 9:5

தேவன் நம்மோடு தமது முன்னறிவைப் பகிர்ந்து கொள்ள மூன்று பிரதான காரணங்கள் என்னவெனில், முதலாவது, அவர் சர்வவல்லமையுள்ள தேவன் என்பதை மானிடருக்கு நிரூபித்தல் இரண்டாவது; எதிர்கால நம்பிக்கையை மக்களுக்கு அளிப்பது; மூன்றாவது, பூமியின் மேல் வரப்போகும் பயங்கரமான பேராபத்து மற்றும் அழிவுகளிலிருந்து மக்களை இரட்சிப்பது எப்படி என எச்சரிப்பது. உதார ணத்திற்கு, ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில், தேவன் தமது வல்லமையை நிரூபித்து கூறுகிறார்: *"பூர்வ காலத்தில் தெரிவிக்கப்பட்டவைகள், இதோ நிறைவேறலாயின: புதியவைகளையும் நானே அறிவிக்கிறேன்; அவைகள் தோன்றாததற்குமுன்னே அவைகளை உங்களுக்குச் சொல்லுகிறேன்."*[18]

ஆமோஸின் புத்தகத்தில் தீர்க்கதரிசி சொல்கிறார்: *"கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்."*[19] இருந்தபோதிலும், தேவனுடைய வார்த்தைகளின் எச்சரிக்கையை மக்கள் விசுவாசியாமல் அடிக்கடி மறுதலித்து, தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுத்தினர். உதாரணத்திற்கு நாளாகமத்தின் புத்தகம் நமக்குச் சொல்கிறது, *"அவர்களுடைய பிதாக்களின் தேவ னாகிய கர்த்தர் தமது ஜனத்தையும் தமது வாசஸ்தலத்தையும் காப்பதற்கான இரக்கமுள்ள வராயிருந்தபடியால், அவர்களிடத்துக்குத் தம்முடைய ஸ்தானாதிபதிகளை (எச்சரிப்புகளை) ஏற்கனவே அனுப்பினார். ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஸ்தானாபதிகளைப் பரியாசம்பண்ணி, அவருடைய வார்த்தைகளை அசட்டை செய்து, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால், கர்த்தருடைய உக்கிரம் அவருடைய ஜனத்தின்மேல் மூண்டது; சகாயமில்லாமல் போயிற்று."*[20]

மிகவும் முக்கியமாக, 2000 வருடங்களுக்கு முன்பே பின்பு நிறைவேறிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய நிகழ்ச்சிகளை வேதாகமம் தெளிவாக முன்னறிவித்தது. ஆயினும் இயேசு பூமிக்குப் பரிபூரண வல்லமையுடன்

---

[18] ஏசாயா 42:9

[19] ஆமோஸ் 3:7

[20] II .நாளாகமம் 36:15-16

திரும்பி வந்து, அழிவு மற்றும் மரணம் போன்றவற்றிலிருந்து உலகை ரட்சிப்பார் எனவும் வேதாகமம் முன்னறிவிக்கின்றது. நாம் இவ்வாக்குறுதிகளில் உறுதியாயிருக்கலாம். ஏனெனில் தேவன் முற்காலங்களில் தமது வாக்குறுதிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி இருக்கின்றார்.
வேதாகமத்தின் ஏனைய தீர்க்கதரிசனங்களில் அநேகம் இஸ்ரவேல் மற்றும் அதைச் சூழ்ந்த தேசங்களையும் பற்றி இருக்கின்றன. கி.பி. 70ல் பண்டைய இஸ்ரேல் தேசம் ரோமர்களால் அழிக்கப்பட்டு உலக வரை படத்திலிருந்து நீக்கப்பட்டது. இருந்தபோதிலும், ஏறக் குறைய 2000 வருடங்களுக்குப்பின்பு (1948ல்) தேசம் மீண்டும் உருவாக்கப்பட்டு, உலகமுழுவதிலும் சிதறி யிருக்கின்ற யூதர்கள் தங்கள் முன்னோர்களின் தேசத்திற்கு இன்னும் திரும்புகின்றனர். இந்த சம்ப வங்கள் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு தேவனால் தெளிவாக முன்னறிவிக்கப்பட்டிருப்பது வியக்கத்தக்கது.

இயேசுவின் மரணத்திற்குப்பின்பு, ரோமப் பேரரசு இஸ்ரவேலரை முழுவதும் அடக்கி அழித்து யூதரை இந்தியா உட்பட உலகமுழுவதிலும் சிதறடித்தனர். இது தேவ குமாரனாகிய இயேசுவை மறுதலித்து கொலைசெய்ததால் பிதாவாகிய தேவன் இஸ்ர வேலருக்கு அளித்த தண்டனையாகும். இருப்பினும் சுமார் 2000 வருடங்களுக்குப் பின்பு நாடுகடத்தப்பட்டு சிதறி வாழ்ந்த யூத மக்கள் இன்று மீண்டும் சொந்த தேசத்துக் குடிகளானார்கள்! தேவன் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு எரேமியா உட்பட எண்ணற்ற தீர்க்கதரிசிகளின் மூலமாக முன்னறிவித்தபடி மீண்டும் யூதர்கள் தங்களின் தேசத்திற்குப் பறக்கத் துவங்கினர்.
*“இதோ, என் சினத்திலும், என் கோபத்திலும், என் மகா உக்கிரத்திலும், நான் அவர்களைத் துரத்தி. எல்லாத் தேசங்களிலுமிருந்து அவர்களைச் சேர்த்துக் கொண்டு, அவர்களை இந்த ஸ்தலத்துக்குத் திரும்பி வரவும் இதிலே சுகமாய்த் தங்கியிருக்கவும் பண்ணுவேன். அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்.”*[21]

இன்று இஸ்ரவேலில் நடைபெறும் பயங்கரமான சண்டைகளிலிருந்து இத்தீர்க்கதரிசனம் இன்னும் முற்றிலும் நிறைவேறவில்லை என்பது தெளிவாகின்றது. உண்மையில் இயேசு திரும்பவும்

---

[21] எரேமியா 32:37,38

கடைசியாக சமாதானத்தையும் நீதியையும் கொண்டுவரும் முன்னதாக இச்சண்டை முன்னிலும் மோசமடைந்து, பல நாடுகளுக்கும் ஊடுருவும், என்பதாக வேதாக மத்தின் தீர்க்கதரிசனங்கள் விவரிக்கின்றன.

## ஜீவனும் மரணமும்

வாழ்வும் மரணமும் பற்றிய கேள்விகளுக்கு வேதாகமம் உண்மையான அர்த்தமுள்ள பதில் அளிக்கின்றது. ஒரு புதிய குழந்தையின் பிறப்பில் அதிக சந்தோஷமுண்டாகிறது போல, அன்புக்குரிய ஒருவர் மரிக்கும்போது மிகபெரிய கவலையும் உண்டாகிறது. மரணம் இறுதியானது என மிகவும் சில மக்களே ஏற்றுக்கொள்கின்றனர். உண்மையில், உலகில் பல மதத்தலைவர்கள், மக்கள் அழிபவர்கள் அல்ல - அவர்கள் கல்லறையில் வைத்தபின்பும் அவர்களிலிருந்து வாழும் ஒரு பகுதி பிரிந்து செல்கிறது என்ற கருத்தில் போதனை செய்கின்றனர்.



இருப்பினும் நாம் உண்மையாக அழிவுக்குரியவர்கள் என்று வேதாகமம் போதிக்கிறது. அது மனிதனுடைய முடிவைப் புல் உலருவதற்கு ஒப்பிடுகிறது. *"மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது. வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான். காற்று அதின் மேல் வீசினவுடனே அது இல்லாமற் போயிற்று."*[22]

நமது வாழ்க்கை எளிதில் மறையக்கூடியது என்பதைத் தினமும் நாம் வெளிப்படையாகக் காண்கிறோம். மேலும் சில குறிப்பிட்ட வருடங்களில் இறப்போம் என்பது நாம் அறிந்ததே. இருப்பினும் அது எப்பொழுதும் தொடராது என வேதாகமம் நமக்குச் சொல்கிறது. முதல் மனிதன் ஆதாம், தேவனுக்குக் கீழ்ப்படியாத காரணத்தால் மனித குலம் பாவத்திற்குள்ளாகி அழிவு (அதாவது மரணம்) அடைந்து விட்டது என்பதாக வேதாகமம் சொல்கிறது.

எனவே வேதாகமம் மாபெரும் நம்பிக்கையை அளிக்கிறது. அது இயற்கைக்கு அப்பாற்பட்ட விஷயத்தை அளிக்கிறது. அது மரணத்தை வெல்லும் ஓர் வழியும் மரணமற்றதும் முடிவற்றதுமாகிய

---

[22] சங்கீதம் 103: 15-16

வியப்புக்குரிய புதிய வாழ்க்கையுமாகும். அவருடைய அன்பின் போதனைகளைப் பின்பற்றி அவரை விசுவாசிக்கும் மக்களுக்குத் தேவன் அளிக்கும் சமாதான வாழ்க்கை மற்றும் நித்திய ஜீவனின் ஈவுகள் ஆகும். உயிர்த்தெழுதல் மற்றும் அழிவின்மையின் வரங்களைப் பெற்ற முதல் நபர் இயேசு கிறிஸ்துவே. இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவோருக்கு இவ் வரத்தைக் கொடுப்பதாக தேவன் வாக்களித்துள்ளார்:
*“ மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷ னால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லோரும் மரிக்கிறது போல, கிறிஸ்து வுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப் படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்பிக்கப் படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து, பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப் படுவார்கள்.”*[23]

வேதனை,கிலேசம், பிணிகள், அநீதி மற்றும் இயற்கை சீற்றம் போன்ற மரணத்திற்கு வழிநடத்துபவைகள். அனைத்தும், தேவனுடைய நேர்மையும் நீதியுமான ஆட்சியை பூமிமீது நிலைநாட்டும்படி கிறிஸ்து திரும்பி வரும்போது, ஒழிந்துபோகும். தேவன், எல்லா மக்களும் தங்கள் வாழ்க்கையில் அவரவர் வழியைத் தேர்ந்தெடுத்து இப்போது வாழ அவர்களுக்குச் சுய உரிமையை அளித்திருக்கிறார். ஆயினும் அவர் தரும் மாபெரும் வரத்திற்கேற்ற விதமாய் நாம் நடக்க வில்லை யானால் நித்தியமாக முழுமையான மரணத்தைப் பெறுவோம் என்று தெளிவாக எச்சரிக்கப் படுகிறோம்.

## வேதாகமமும் தொல்பொருள் ஆய்வும்



வேதாகமம் சரித்திரம் மற்றும் செய்தித் தகவல்களின் தலைசிறந்த மூல காரண மாகும். உதாரணத்திற்கு, ராஜாக்களின் புத்தகம் இஸ்ரவேல் தேசத்தை ஆட்சி செய்த வெவ்வேறு அரசர்களின் வாழ்க்கையின் நிகழ்ச்சி களையும், எகிப்து, சிரியா, லெபனான் போன்ற இஸ்ரவேலைச் சூழ்ந்த எண்ணற்ற பண்டைய தேசங்களின் சம்பவங்களையும் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. கடந்த 150 வருடங்களுக்கு மேலாக தொல்பொருள் ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகள் வேதாகமத்திலுள்ள

[23] I.கொரிந்தியர் 15:21-23

எண்ணற்ற வரலாற்றுக் குறிப்புகளை உண்மையென அதிகாரப் பூர்வமாக வெளிப்படுத்துகின்றன. ஒரு சில உதாரணங்களைக் கீழே காணலாம்:

***பாபிலோன்:*** 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், நெபுக்காத்நேச்சார் அரசனைக் குறிப்பிடும் பண்டைய பாபிலோனின் இடிபாடுகளின் எண்ணற்ற கல்வெட்டு களைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தோண்டி யெடுத்துள்ளனர். இதைக் கண்டடையும் வரை நெபுக்காத்நேச்சார் என்ற பெயர் வேதாகமத்துக்கு வெளியே அறியப்படவில்லை. மேலும் பண்டைய பாபிலோனிய சரித்திரக் குறிப்புக்களின் கண்டு பிடிப்புகளில் கி.மு. 598 - 597ல் எருசலேமின் மீது பாபிலோனின் படையெடுப்பு பற்றின வேதாகம விவரங்களும் இராஜாக்களின் புத்தகங்களின் குறிப்பு களுக்குச் சரியாக ஒத்திருக்கின்றது [24]

***மோவாபிய கல்வெட்டு:***
கி.பி.1800-ன் கடைசியில் தொல்பொருள் ஆராய்ச்சி யாளர்களால் கண்டுப்பிடிக்கப்பட்ட "மோவாபிய கல்வெட்டு"களில் மோவாபிய அரசன் இஸ்ரவேல ருடன் போர் தொடுத்ததைப் பற்றித் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இக்கண்டு பிடிப்புகளின் உத்வேகம் மீண்டும் வேதாகமத்தின் உண்மைகளை உறுதிபடுத்துவது. ஏனெனில் வேதாகம யுத்தங்களின் வரலாற்றுக்கு இணையாக 2. இராஜாக்கள் 1ம்,3ம் அதிகாரங்கள் தெளிவாக விளக்குகின்றன.

## முடிவுரையின் குறிப்புகள்

வேதாகமம் எல்லோருக்கும் சொந்தமான ஒரு புத்தகம். உங்கள் வருணம், வயது, சமயம், அல்லது உங்கள் சமூக அந்தஸ்து எதுவாயினும் அது ஒரு பிரச்சனையல்ல. மனிதன் ஏறக்குறைய காலத்தின் ஆரம்பமான மானிடத் தோற்றத்திலிருந்து அநீதி மற்றும் போராட்டத்தினால் கறைப் பிடித்துக் காணப் படுகிறான். நாம் இன்று காணும்போது வன்முறை களும் தீமைகளும் சூரியனுக்குக் கீழே புதிது அல்ல. இருப்பினும், தேவனுடைய தலையீட்டால் பூமி ஒரு நாள் பரிபூரண நிலையைத் திரும்பவும் அடையும் என்று வேதாகமம் உறுதியானதும் நம்பத் தகுந்தது மான வாக்குறுதிகளை அளிக்கின்றது. தேவனுடைய வாக்குறுதிகளில் பங்கேற்பதற்கு மக்கள் என்ன செய்ய வேண்டும் என்றும், எதிர்கால உலகத்தில் சமாதானம், நேர்மை மற்றும் செழுமையான வாழ்க்கை வாழ்ந்து மகிழவும் அது வழிக்காட்டுகிறது.

---

[24] II.இராஜாக்கள் 24:10-17

*வேதாகமத்தைப் பற்றிய மேலும் விபரங்களுக்கு மற்றும் கீழ்க்கண்ட இலவச புத்தகங்களுக்கு எமக்கு எழுதுங்கள்:*

- வேதாகம அஞ்சல்வழி கல்வி
- ஒரே கடவுள்
- மரணத்திற்குப் பிறகு - என்ன?
- இரட்சிப்பு

| | |
|---|---|
| INDIA:<br><br>The Christadelphians,<br>P.O. Box 4237<br>Bangalore 560-042<br>Email:<br>choose2live@vsnl.net | SRI LANKA:<br>The Christadelphians,<br>P.O. Box 60,<br>Negombo - 11500,<br>SRI LANKA.<br>Email:<br>christadelphian@idmng.ccom.lk<br>www.readthebible.lk<br>Ph: 031 2238779 /<br>0776124294. |